வளன்ஆயம்
நெறிதோறும் புதுமைசேர்
தமிழாய்வுத்துறை
தூய வளனார் கல்லூரி [தன்னாட்சி]
திருச்சிராப்பள்ளி- 620002

# தனிப்பாடல் வழி அறியலாகும் பழக்கவழக்கங்களும் நம்பிக்கைகளும்

**மு.பிரபாகரன்,** முனைவர் பட்ட ஆய்வாளர், தூய வளனார் கல்லூரி, திருச்சிராப்பள்ளி.-02

**ஆய்வுச்சுருக்கம்**

நம் தமிழ்ச் சமூகம் நீண்டநெடிய பாரம்பரியத்தை உடையது. மக்கள் இயல்பாக தம் வாழ்வில் கடைபிடிக்கும் பழக்கவழக்கங்களையும் நம்பிக்கைகளையும் தனிப்பாடல்களின் வழி அறிவதே இக்கட்டுரையின் நோக்கமாகும். இவ்வாய்வுக்காக கா.சுப்பிரமணியப் பிள்ளையின் தனிப்பாடல் திரட்டு மூல நூலாகக் கையாளப்பட்டுள்ளது.

**கலைச் சொற்கள்**

1. தேடட்டுணு
2. அடைக்காய்
3. கரும்பனை
4. மிடியன்
5. சூரன்

**முன்னுரை:**

தமிழ்மொழி இலக்கிய வளமும் இலக்கண நெறியும் கொண்ட மிகப் பழமையான மொழி பல பரிணாமங்களைக் கடந்து இன்றும் நிலைத்து வளர்ந்து வருகின்ற மொழியாகும். இலக்கியப் பாடல்களை குறுந்தொகை, நெடுந்தொகை, கலித்தொகை, எனத் தொகுத்துள்ளனர். இந்தத் தொகைநூல்கள் அனைத்தும் பல்வேறு காலங்களில் பல்வேறு இடங்களில் வாழ்ந்த புலவர்களின் பழைய பாடல்களின் தொகுப்பேயாகும். இவை

போலவே தனிப்படல் திரட்டும் ஒரு தொகை நூலாகும். தொகை நூல் குறித்த இலக்கணம் கி.பி.12 ஆம் நூற்றாண்டிலேயே காணப்படுகின்றது.

**இலக்கணம்:**

**தொகைநிலைச் செய்யுள் தோன்றக்கூறின்**

**ஒருவர் உரைத்தவும் பல்லோர் பகர்ந்தவும்**
**பொருள் இடம் காலம் தொழில் என நான்கினும்**
**பாட்டினும் அளவினும் கூட்டியதாகும்**

எனத் தண்டியலங்காரம் தொகை நூலுக்கு இலக்கணம் பகர்கின்றது. தொகை நூல்களை அமைப்பு வகையால் நான்கு பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

1. நூலாகத் தொகுத்தல்
2. நூல்களிலிருந்து தொகுத்தல்
3. நூல்களைத் தொகுத்தல்
4. நூல்களையும் பாடல்களையும் தொகுத்தல்

(எ.கா) கண்ணன் பாட்டு, குயில்பாட்டு, பாஞ்சாலிசபதம் இவற்றோடு பாரதியார் பாடிய தனிப்பாடல்களும் இணைத்து ஒரு தொகுதியாக வெளிவந்துள்ளது.

**பழக்க வழக்கங்கள்**

நம் தமிழ்ச்சமூகத்தில் படிந்திருக்கின்ற பழக்க வழக்கங்களையும் நம்பிக்கைகளையும் புலவர்கள் தங்களின் பாடல்கள் மூலம் வெளிப்படுத்தியுள்ளனர். உறவினர்களைத் திருமணத்திற்கு அழைக்கும் பொருட்டு "கண்ணால் ஓலை" எழுதும் பழக்கத்தைக் கடைபிடித்துள்ளனர்.

**"கண்ணால் வோலை கடிதெழுத வாராயேல்**
**தன்னாண்மை தீர்ப்பன் சபித்து"**

என ஔவையார் தன்பாடல் மூலம் வெளிபடுத்தியுள்ளார். திருமணத்தின் போது பெண்ணுக்கு சீதனம் கொடுத்து அனுப்பினர். அம்மிமிதித்தல் வழக்கத்தில் இருந்தது. ஆண்கள் இரண்டு பெண்களை மணந்துகொள்ளும் இருதாரமணம் தமிழ்ச் சமூகத்தில் காணப்பட்டது.

அப்பழக்கம் இன்றுவரை நடைமுறையில் உள்ளது. கணவனை இழந்த பெண்களின் நிலையைக் கீழ்கண்ட பாடலில் விளக்கியுள்ளார் புலவர்.

**"நில்லாத பல்லும் பறிபட்ட கூந்தலு நீண்டகரிப்**
**பொல்லா வழக்குப் புடவையு மாய்வெகு பூச்சீயம்போய்ச்**
**செல்லாப் பணத்துக்குத் தேடடூணு மற்றுத் தியங்கியொன்றும்**
**இல்லாத பாவிதனக் கார்துணை பொன்னி ராட்டினமே"**

கணவனை இழந்த பெண்களின் கூந்தல் மலிக்கப்பட்டன. அவர்கள் தங்களை ஒப்பனை செய்து கொள்ளுவதில்லை மேலும் புடவைகள் அழுக்காக இருந்தன. அவர்களை வீட்டிலும் யாரும் மதிப்பதில்லை பல இன்னலுக்கு ஆளாக்கப்பட்டனர். ஆண்டுக்கு ஒரு முறை ஆசிரியர்கள் ஊருக்குள் வந்து காணிக்கையாக உணவு தானியங்களைப் பெற்றுச் சென்றுள்ளனர். புலவர்கள் பரிசு பெற்றுச் செல்லும் போது அவர்களை வழி அனுப்பும் பொருட்டுப் பத்தடி அல்லது இருபத்து நான்கு அடி சென்று அரசர்கள் வழியனுப்பும் பழக்கம் இருந்துள்ளது. மிகவும் அரிதான அல்லது கடினமான செயல்களைக் குறிக்க "குதிரை கொம்பு" என்ற சொல்லைப் பயன்படுத்தினர் இக்காலத்திலும் கிராமப் புறங்களில் அரசுப் பணி பெறுவதை "குதிரை கொம்பு" என்றே குறிப்பிடுகின்றனர்.

வீட்டில் நடக்கும் விசேசங்களுக்கு உறவினர்களை அழைக்கும் போது பாக்கும், பணமும் வைத்து அழைத்தனர். போரில் வீரமரணம் அடைந்தவருக்கு நடுகல் எழுப்பி வணங்கினர். அரசர்கள் பிறந்தநாள் விழாக்களின் போது கைதிகள் விடுதலை செய்வதை வழக்கமாகக் கொண்டிருந்தனர். நம்பிக்கைகள் இராசி பலன்களில் நம்பிக்கை கொண்டிருந்தனர் ஒருவனின் இராசியைக் கொண்டு அவர்களின் குணநலன்களைக் கணித்தனர்.

**" ஆடோ டெதிரிடேல் மாடோடு சேரேல்**
**தண்டு கொண் டிற்புகேல் நண்டுக் கிடங்கொடேல்**
**சிங்கத் தானோடே துங்கப் போர்செயேல்**
**கன்னி மகனைத் துன்னி விடாதே"**

என்ற பாடலைப் புலவர் பாடியிருப்பதைப் பார்க்கும் போது மக்களிடத்தில் தலையெழுத்து, விதி முதலியவற்றில் நம்பிக்கை கொண்டிருந்தனர் என்பதை அறியமுடிகிறது. மக்களிடையே குறி கேட்கும் பழக்கம் இருந்தது நெல்லை முறத்திலிட்டுக் குறி பார்க்கும் முறை இருந்தது. பல்லியின் குரலுக்குப் பலன்

கணித்தனர் பறவைகள் தமக்கு வலமாக அல்லது இடமாகச் செல்வதை கவனித்து பலன் கணித்தனர்.

**”இணையிறன திலிலொருவன் கீழ்த்திசையிற்**
**றலைவைக்க வினிய மாமன்**
**மணிதிகழ்பொன் னெடுமாடத் துறைந்திடிற்றென்**
**நிசையதனில் வைக்க வேண்டும்”**

தலை வைத்துப் படுக்கும் போதும் தனது வீட்டில் கிழக்குத் திசையில் தலைவைத்தும் மாமனார் வீட்டில் தென் திசையிலும் தலை வைத்துப் படுக்க வேண்டும். வடக்குப் பக்கம் தலைவைத்து படுப்பது உடல்நலத்திற்கு கேடு விளைவிக்கும் எனக் கணித்துள்ளனர். பேய்கள் பற்றிய நம்பிக்கை மக்களிடையே அதிகம் காணப்பட்டது இறந்தவர்களைப் புதைக்கும் போது சில மந்திரங்களை ஓதி புதைத்தால் அவர்களின் ஆவி வெளிவராது என நம்பினார். காலையிலும் மாலையிலும் தூங்குகின்றவர்கள் இரவில் தயிரை உணவில் சேர்த்துக் கொள்கின்றவர்களும் செல்வத்தை இழப்பார்கள் என்று நம்பினர்.

**”செந்தமி ழுடைகாய் நீறு சிவிகைபொன் னார மாடை**
**சுந்தர மான தோகை துலங்கு மிவ் வகைக ளேழும்”**

செந்தமிழ்நூல், வெற்றிலை பாக்கு, திருநீறு, பல்லாக்கு பொன்மாலை, உடை, அழகிய கன்னிப்பெண் ஆகிய இவ்வேழு வகைப் பொருட்களையும் அவன் முயலாமல் அவனுக்குக் கிடைத்தால் இரு கைகளாலும் பெற்றுக் கொள்ள வேண்டும். வேண்டாம் என்று சொல்லுபவனை விட்டு திருமகள் விலகிவிடுவாள் ஒருவர் கையில் உப்பை வைத்து சத்தியம் செய்தால் அதனை அவர்கள் காப்பாற்றுவார்கள் என நம்பினார்.

**”அன்னமும் வேம்பாகும் வெறுத்தழுது கமுகுரலா**
**அக்கல்லத் தியிலேறுங் கரும்பனைக் கண்டுடையுஞ்**
**சின்னமா தென்னைவிட்டாள் பொய்யில வம்பலவே**
**சொல்வாகை யிலுப்பை வைத்துச் சொல்வேன்**
**சத்தியமாய்”**

என்ற பாடல் மூலம் இதனை அறிய முடிகிறது வயதில் மூத்தவர்களைப் பார்க்கச் செல்லும் போது கையுரையாகப் பழங்களை வாங்கிச் சென்றனர்.

**"முத்தியில் விருப்ப முடையவன் மிடியன்**
**மூர்க்கன் சேண் டேயத்தி லுள்ளோன்**
**புத்தியில் வயிரம் பொருந்திய சூரன்"**

இதுபோன்ற தன்மை உடைய ஆடவருக்குச் சமுதாயத்தில் பெண் கொடுப்பதில்லை.

மக்களிடையே வட்டிக்குப் பணம் கொடுத்தல், அதற்கு வட்டி பணம் பிடித்தல் போன்ற பழக்கங்கள் அக்காலத்திலே இருந்து வந்துள்ளன.

**ஈராறு மீரரையு மில்லையென்றே னாதலினால்**
**ஈராறு சொல்லா திருந்தீரோ - ஈராறு**
**கட்டி யணைத்தேநீர் காதலுட னேசேர்ந்தால்**
**வட்டியுடன் றானே வரும்.**

இப்பாடலின் மூலம் சுந்தர கவிராயர் விளக்கியுள்ளார்.

பெண்கள் கருவுற்றக் காலங்களில் தங்களின் தாய்வீட்டுக்குச் செல்வதை காலம்காலமாகப் பெண்கள் கடைபிடித்து வரும் பழக்கமாகும். இச்செய்தியை வேதநாயகம் பிள்ளை தன்னுடையப் பாடலில் குறிப்பிட்டு சென்றுள்ளார்.

**ஆகும் பிரசவத்துக் கப்பனூர்க் கென்னைவிட்டுப்**
**போகும் படியிசையாப் பூவையே – யேகமாய்**
**முக்கால லமுமுணர்ந்த மூலனா மப்பனூர்க்**
**கில்கால நீபோன தென்?**

தான் எடுத்த செயலை முடிக்க வேண்டும் என்பதில் தீவிரமாக இருப்பார்கள். இதனை கங்கணம் கட்டிக் கொள்ளுதல் என்னும் சொலவடையாள் சொல்வார்கள். இதனை தமதுப் பாடலில் புலவர் குறிப்பிட்டுள்ளார்.

**வானனென் றுதவ வருஞ்சுப்ர மணிய வரோதயனே**
**தானென்று வெண்ணரன் பாடையிந் நாட்டில் தலையெடுக்க**
**வேனென்று கேட்பவ ரில்லாத் தமிழை யினிதளிக்க**
**நானென்று கங்கணங் கட்டிக் கொண்டாயிந்த நானிலத்தே**

**முடிவுரை:**

புலவர்கள் தொடர் நிலைச் செய்யுளாகப் பாடும் பாடல்கள் தனி நூலாக வெளிவந்து மக்களால் போற்றிப் பாதுகாக்கப்படுகின்றது. ஆனால் தனித்தன்மை வாய்ந்த தனிப்பாடல்கள் பிறர் ஒருவரால் தொகுக்கப்பட்டு தொகை நூலாக நம்பிக்கையில் உலாவுகின்றது. இப்பாடல்களைப் படிப்பதன் மூலம் நம் முன்னோர்களின் பழக்க வழக்கத்தையும் நம்பிக்கையையும் நம்மால் அறிந்து கொள்ள முடிகின்றது.

**சான்றெண் விளக்கம்**


1. சுப்பிரமணியம் இராம - தண்டியலங்காரம் பக் - 22
2. சுப்பிரமணியப்பிள்ளை கா., தனிப்பாடல் திரட்டு,பக்-10 (முதல்தொகுதி)
3. மேலது பக் - 79 (முதல்தொகுதி)
4. மேலது பக் - 294 (இரண்டாம் தொகுதி)
5. மேலது பக் - 216 (இரண்டாம் தொகுதி)
6. மேலது பக் - 385 (இரண்டாம் தொகுதி)
7. மேலது பக் - 387 (இரண்டாம் தொகுதி)
8. மேலது பக் - 186 (இரண்டாம் தொகுதி)
9. மேலது பக் - 44 (இரண்டாம் தொகுதி)
10. மேலது பக் - 138 (இரண்டாம் தொகுதி)
11. மேலது பக் - 124 (இரண்டாம் தொகுதி)


**துணைநின்ற நூல்கள்**


1. சுப்பிரமணியம் இராம – தண்டியலங்காரம்
(முல்லை நிலையம்) 9, பாரதி நகர் - முதல் தெரு
தியாகராயநகர், சென்னை – 600 017
முதற்பதிப்பு – ஏப்ரல் 1998

2. சுப்பிரமணியப்பிள்ளை கா.
தனிப்பாடல் திரட்டு
(சாரதாபதிப்பகம்)
முதற்பதிப்பு – 2006
சென்னை – 600 014